INSTITUTE FOR HEALTH POLICY

72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி : 29 August 2024
நேரம் : 11:30 AM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல் : info ‘at’ ihp.lk


**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi ‘at’ ihp.lk Twitter: @ravirannaneliya


# அ. கு. திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் ஜூலை மாத வாக்காளர் தீர்மானத்தில் நெருக்கமான முன்னிலையில் வகிக்கின்றனர், ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கான ஆதரவு அதிகரிக்கின்றது

*ஜூலை 2024 IHP MRP ஜனாதிபதி தேர்தல் புதுபிப்பு*

IHP-ன் ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம் பற்றிய இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின்(SLOTS) ஜூலை 2024ற்கான தற்காலிக MRP மதிப்பீடுகள் என்.பி.பி./ஜே.வி.பி. தலைவர் அ. கு. திஸாநாயக மற்றும் எஸ்.ஜே.பி. தலைவர் சஜித் பிரேமதாச மிக நெருக்கமான போட்டியில் (பிழை விளிம்பிற்குள் தலா 37% மற்றும் 36%) முன்னணியில் இருப்பதையும், ஆனால் வயது வந்தவர்கள் மத்தியில் இருவரும் 40% க்கும் குறைவாகவே இருப்பதையும் காட்டுகின்றன.




அதே நேரத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தொடரும் எழுச்சியை ஜூலை மாதம் கண்டது. அவரது ஆதரவு 23% ஆக அதிகரித்தது. எஸ். எல். பி. பி. வேட்பாளருக்கான ஆதரவு மாறாமல் 4% ஆக இருந்தது , அதோடு நாமல் ரா ஆகஸ்ட் மாததில்தான் வேட்பாளரென அறிவித்தார்.





ஒவ்வொரு வேட்பாளரையும் ஆதரிப்பவர்கள் யார் என்பதில் சில வேறுபாடுகளை ஜூன்-ஜூலை மதிப்பீடுகளின் பகுப்பாய்வு குறிக்கிறது. அனுர குமாரவிற்கான ஆதரவு இளைஞர்களிடையே வலுவாக இருந்தது, அவர்களில் பெரும்பான்மையினர் அவரை ஆதரித்தனர் (54%), அதே போல் சிங்கள வாக்காளர்கள் (41%) மற்றும் மிகவும் வசதியானவர்களில் மூன்றில் ஒரு பங்கு (42%) வாக்காளர்கள் மத்தியிலும் இருந்தது. இதற்கு நேர்மாறாக, சஜித் பிரேமதாச வாக்காளர்களில் ஏழைகள் மூன்றில் ஒரு பகுதியினர் மத்தியிலும் (42%), சிறுபான்மையினர் மத்தியிலும்

(இலங்கைத் தமிழர்களில் 51% மற்றும் முஸ்லிம்களில் 65%) முன்னிலை வகித்தார்.

ஜனாதிபதி விக்ரமசிங்கவின் ஆதரவு வயதுக்கு ஏற்ப அதிகரித்து, 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களில் 38% ஐ எட்டியது, மேலும் அவர் ஆண்களை விட (17%) பெண்கள் மத்தியில்(26%) அதிக ஆதரவைப் பெற்றார். இதைத்தவிர, மற்ற மக்கள் தொகை பிரிவுகளுக்கிடையே அவருக்கான ஆதரவு, பெரும்பாலும் சமமாக காணப்பட்டது.

**மக்கள்தொகை பண்பின்படி ஜனாதிபதித் தேர்தல் வாக்காளர் தீர்மானம் , ஜூன்-ஜூலை 2024 (வயது வந்தவர்கள் %)**

இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால் நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள்?





**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்து கண்காணிப்பு ஆய்வு MRP**
அக்டோ. 01 2021-ஆக. 19 2024 வரை நடத்தப்பட்ட 19,015 பேட்டிகள் மற்றும் ஜூன்-ஜூலை 2024 இல் நடத்தப்பட்ட 1,146 பேட்டிகளின் அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்ட தரவுகளையும் கொண்டு MRP என்னும் ஒரு புள்ளியியல் மாதிரியிலிருந்து மதிப்பீடுகள் பெறப்படுகின்றன.

SLOTS தேர்தல் இயக்குனர் மருத்துவர் ரவி ரன்னன்-எலியா, குறிப்பிடுகையில், "அனுர குமாரவின் பலம் இளைஞர்களிடையே இருக்கும் ஆதரவு மட்டுமல்ல, அதிருப்தி அடைந்த கோட்டாபய வாக்காளர்களில் மிகப்பெரிய பங்கை வென்றெடுத்ததும் ஆகும். ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் ஆரம்ப பலத்திற்கும் அதே குழுவின் ஆதரவு காரணமாகும், ஏனெனில் 2019 இல் சஜித் பிரேமதாசவை ஆதரித்த வாக்காளர்களில் ஐந்தில் ஒருவரின் ஆதரவினை மட்டுமே அவரால் பெறமுடிந்தது” என்றார்.

**2019 ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு வரலாற்றின் அடிப்படையில் ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம், ஜூன்-ஜூலை 2024**

இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால் நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள்?




**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்து கண்காணிப்பு ஆய்வு MRP**

அக்டோ. 01 2021-ஆக. 19 2024 வரை நடத்தப்பட்ட 19,015 பேட்டிகள் மற்றும் ஜூன்-ஜூலை 2024 இல் நடத்தப்பட்ட 1,146 பேட்டிகளின் அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்ட தரவுகளையும் கொண்டு MRP என்னும் ஒரு புள்ளியியல் மாதிரியிலிருந்து மதிப்பீடுகள் பெறப்படுகின்றன.

இந்த மதிப்பீடுகள் IHP SLOTS பல நிலை பின்னடைவு மற்றும் பிந்தைய அடுக்கு (Multilevel Regression and Poststratification) (MRP) மாதிரியை (01/2024 திருத்தப்பட்டது) அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்பட்டவை. இந்த புதுப்பிப்பு அனைத்து வயதுவந்தவர் அனைவருக்கும் மற்றும் அக்டோபர் 19,015 முதல் 19 ஆகஸ்ட் 2024 வரை நடத்தப்பட்ட 2024 பேட்டிகளின் தரவைப் பயன்படுத்துகிறது, இதில் 2024 ஜூலை மாதத்தில் நடத்தப்பட்ட 701 பேட்டிகள் மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்ட 497 பேட்டிகளும் அடங்குவன. மாதிரியின் நிச்சயமற்ற தன்மையை கவனத்தில் எடுக்க 100 பூட்ஸ்ட்ராப்புகள் ஓட்டப்பட்டன. ஜூலை மாதத்தில் பிழை விளிம்பு 1-3% என மதிப்பிடப்பட்டது. IHP வரவிருக்கும் வாரங்களில் அதன் நேர்காணல் எண்களை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது, மேலும் அதன் அடுத்த மதிப்பீடுகள் மிகவும் வலுவானதாக இருக்கும் என்று நம்புகிறது.

IHPன் SLOTS MRP முறையானது, பதிலளிப்பவர்களின் பல்வேறு வகையான குணாதிசயங்களுக்கும் அவர்களின் கருத்துக்களுக்கும் – இங்கு, “இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால் நீங்கள் எந்த கட்சிக்கு வாக்களிப்பீர்கள்?” என்னும் கருத்துக்கும் – இடையேயான தொடர்பை பல அடுக்கு(multilevel model) புள்ளியியல் மாதிரியின் மூலம் முதலில் மதிப்பிடுகிறது. அதன் பின் தேசிய மக்கள்தொகைக்கு ஏற்ப அளவீடு செய்யப்பட்ட ஒரு பாரிய தரவு கோப்பை பயன்படுத்தி, ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு கட்சிகளுக்கு அவர்கள் வாக்களிக்ககூடிய நிகழ்தகவினைப்பற்றி பல அடுக்கு மாதிரி(multilevel model) கூறுவதை வைத்து(‘post-stratification’), அக். 2021 முதல் ஒவ்வொரு மாதமும் வாக்காளர் தீர்மானத்தை கணிக்கிறது. மாதிரியில் உள்ள நிச்சயமற்ற தன்மைகளை பிரதிபலிக்கவும், பிழை விளிம்புகளைப் பெறவும் பல அடுக்கு மாதிரி(multilevel model) 100 முறை மதிப்பிடப்பட்டது. முந்தைய

மாதங்களுக்கான வாக்களிக்கும் நோக்கம் முடிவுகள் இந்த புதுப்பிப்பில் மாறியுள்ளன, ஏனெனில் கடைசி வெளியீட்டிற்குப் பிறகு கூடுதல் தரவு சேகரிக்கப்பட்டது மற்றும் இந்த மாற்றங்கள் பிழையின் விளிம்பிற்குள் உள்ளன.

## முந்தைய அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்


Institute for Health Policy, March 2024, "AK Dissanayake (53%) continues to lead Sajith Premadasa (34%) in Presidential Election voting intent in February 2024. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update February 2024". *Available at:*https://ihp.lk/press-releases/ak-dissanayake-53-continues-lead-sajith-premadasa-34-presidential-election-voting

Institute for Health Policy, April 2024, "Sajith Premadasa (41%) closes gap with AK Dissanayake (44%) in Presidential Election voting intent in March 2024. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update March 2024". *Available at:*https://ihp.lk/press-releases/sajith-premadasa-41-closes-gap-ak-dissanayake-44-presidential-election-voting-intent

Institute for Health Policy, May 2024, "Sajith Premadasa and AK Dissanayake tied with 39% support in Presidential Election voting intent in April 2024. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update April 2024". *Available at:*https://ihp.lk/press-releases/sajith-premadasa-and-ak-dissanayake-tied-39-support-presidential-election-voting

Institute for Health Policy, June 2024, "AK Dissanayake (39%) and Sajith Premadasa (38%) continue to bolster support in Presidential Election voting intent in May 2024. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update May 2024". *Available at:*https://ihp.lk/press-releases/ak-dissanayake-39-and-sajith-premadasa-38-continue-bolster-support-presidential

Institute for Health Policy, July 2024, "Sajith Premadasa (43%) leads as Presidential Election kicks off in June 2024, but within margin of error. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update June 2024". *Available at:*https://ihp.lk/press-releases/sajith-premadasa-43-leads-presidential-election-kicks-june-2024-within-margin-error


## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிப்புகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## செய்முறை

முன்தேர்வு இல்லாமல் சீரற்ற இலக்க டயல் மூலம் தொடர்புகொண்ட கைப்பேசி எண்களின் மூலம் சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் சீரற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்கானல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பை மதிப்பிட அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்தி, வாக்களிப்பு தீர்மானத்தை மல்டிலெவெல் ரிக்ரெஷென் மற்றும் போஸ்ட் ஸ்ற்றாடிபிகேஷன் (Multilevel Regression and Post-Stratification) (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்கின்றது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மை மல்டிபல் இம்ப்யூடேஷன்(multiple imputation) என்னும் முறையின் மூலம் கருதப்படுகின்றது.

மே 2024க்கான MRP மதிப்பீடுகள் மே 2024 ல் நடத்தப்பட்ட 503 நேர்காணல்கள் மற்றும் அக்டோபர் 1 2021- ஜூன் 24 2024 வரை நடத்தப்பட்ட 17,751 ஒட்டுமொத்த நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டது. அ.கு.திஸாநாயக மற்றும் சஜித் பிரேமதாசவிற்கு பிழை விளிம்பு 3.0–3.8% எனவும், மேலும் ரணில் விக்ரமசிங்க மற்றும் மற்ற உத்தேச வேட்பாளர்களுக்கு 1.3–2.2% என்றும் மதிப்பிடப்பட்டது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, சமூகபொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துவதை உறுதிசெய்ய அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

## நிதியுதவி

முன்பு SLOTS ஆய்விற்கு நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் நிதி வழங்கினர். தற்போதைய கள வேலைகளுக்கு நிதி IHPன் பொது நல ஆய்வு நிதி மற்றும் பிறரால் வழங்கப்படுகின்றது. ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் கருத்துகள் அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.